**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAHILA COURT / ADDITIONAL SPECIAL COURT FOR EXCLUSIVE TRIAL OF CASES UNDER POCSO ACT,COIMBATORE.

S.C.No.93 of 2018

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | DW-2 ஹரிஷ்பாபு | Caste | - |
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Cell | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.11.2022

**முதல் விசாரணை-**

நான் சுந்தராபுரம்-போத்தனூர் மார்க்கத்தில் ராஜமுத்தையா நகரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், எதிரி 1, இறந்த தேவி மூலம் எனக்கு தெரியும். தேவி என்பவர் spanco என்ற call center ல் வேலை பார்த்தார், நானும் அந்த பொண்ணும் executive ஆக வேலை பார்த்தோம். தேவிக்கும், எதிரி 1 ஐயும், திருமணத்திற்கு முன்பிருந்தே எனக்கு அறிமுகம். அவர்கள் திருமணத்தில் நான் கலந்து கொண்டேன். தேவியின் வீட்டில் எதிரி 1 யோகேஸ்வரனுக்கு தேவியை திருமணம் செய்து கொடுக்க அவ்வளவாக இஷ்டமில்லை. ஒன்று யோகேஸ்வரனுக்கும், தேவிக்கும் வயசு வித்தியாசம் அதிகம், யோகேஸ்வரன் பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்தார், தேவியோடு பார்க்கும்போது எதிரி 1 க்கு அவ்வளவு படிப்பு கிடையாது. திருமணம் முடிந்து தம்பதிகள் அந்நியோன்யமாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். நான், பரத்தோட குடும்பம், தேவி, யோகேஸ் குடும்பம் அடிக்கடி வெளியில செல்வோம். தேவிக்கு பிடிவாத குணம் சாஸ்தி. call center ல் ஒரு முறை வேலை பார்த்தபோது மயக்கம் போட்டுவிட்டால், அவளுக்கு ஹெல்த் problem உண்டு. காலேஜ் படிக்கும்போதே அவளுக்கு stomach problem உண்டு, லேடீஸ் பிரச்சனை என்பதால் நான் அவ்வளவுக்கு கேட்டுக்கொள்ளமாட்டேன். தேவி வேலைக்கு வரும்போதே அவளுக்கு பொருளாதார பிரச்சனை இருந்தது, அவளுடைய அண்ணன் சங்கரோடு கருத்து வேறுபாடு இருந்தது, குடும்ப பிரச்சனை

என்பதால் நான் அவ்வளவாக கேட்டுக்கொள்ளவில்லை. அதற்கு பிறகுதான் எதிரி 1 போய் தேவியை பொண்ணு கேட்க போனார். அந்த குடும்பத்தார் முடிந்தளவுக்கு அவாய்ட் பண்ணியிருக்கிறார்கள். தேவி ஒரே மனதாக இருந்து யோகேஸ்வரன் தான் திருமணம் செய்ய வேண்டும் என்று பண்ணிக்கொண்டார். 2012ம் ஆண்டு தான் தேவியை தாராபுரத்தில் கூட்டிக்கொண்டு போய் வைத்திருந்தார். தேவி யோகேஸ்வரனுக்கு போன் செய்து அண்ணன் சங்கர் தன்னை டார்ச்சர் செய்வதாகவும், என்னை வீட்டுக்கு வந்து கூட்டிட்டு போ என்று போனில் சொன்னதாக யோகேஸ்வரன் எனக்கு சொன்னார். நாங்கள் இருவரும் தாராபுரம் போய் தேவியை கூட்டி வந்து, யோகேஸ்வரனுக்கு திருமணம் செய்து வைக்கலாம் என்று நினைத்திருந்தோம். தேவி அரை மணிநேரத்திலே யோகேஸ்வரனுக்கு போன் செய்து தான் லவ் பண்ணுவதை வீட்டில் சொல்லிவிட்டேன் என்றும், அதனால் வீட்டிற்கு வந்து என்னுடைய அம்மாவைப் பார்த்து பேசு என்று சொல்லியிருக்கிறார், இது யோகேஸ்வரன் சொல்லி எனக்கு தெரியும். 2வது நாள் யோகேஸ்வரன் சென்று, அ.சா.1 ஐ பார்த்து பேசியிருக்கிறார். அ.சா.1 புஷ்பராணி யோகேஷ்வரனிடம் வசதி உங்களுக்கு இல்லை என்று சொல்லியிருக்கிறார், வயசு வித்தியாசம் குறித்தும் சொல்லியிருக்கிறார். யோகேஸ்வரன் பேசி முடித்து வெளியே வந்தபிறகு தேவி அவங்க அம்மா கிட்ட பேசியிருப்பால் போல் இருக்கிறது, ஒரே பிடிவாதமாக தேவி இருந்து யோகேஸ் தான் தனக்கு வேண்டும் என்று, வீட்டில் சொல்லி அதன் பிறகு தேவிக்கும், யோகேஸ்வரனுக்கும் திருமணம் நடந்தது. நான் திருமணத்திற்கும், வரவேற்பிற்கும் சென்றிருந்தேன். கணபதிபுதூரில் தேவியும், எதிரி 1ம் தனிக்குடித்தனம் இருந்தபோது நான் ஒரு முறை அவங்க வீட்டுக்கு சென்று பார்த்து வந்தேன், தேவி என்னிடம் நான் நன்றாகத்தான் இருக்கிறேன் என்று சொன்னார். என்னுடைய கணவர் என்னை நன்றாகத்தான் பார்த்துக்கொள்கிறார் என்று சொன்னார். அப்போது நான் அடிக்கடி சென்னை போவேன், தேவியிடம் கூப்பிட்டு யோகேஷ் எப்படி வைத்துள்ளான் என்று அடிக்கடி கேட்பேன். ஒரு 2,3 நாட்கள் நான் அவர்களிடம் பேசாமல் இருந்தேன், அதன்பிறகு சென்னையிலிருந்து கோவைக்கு வந்து, காலையில் சுமார் 10.00 மணி இருக்கும், யோகேஷ் எனக்கு போன் செய்து தேவி இறந்துவிட்டார் என்று சொன்னார்.

தேவி இறப்பதற்கு 3 நாட்களுக்கு முன்னாடி கூட நான் தேவியிடம் அலைபேசியில் பேசினேன். நானும், யோகேஷை சரவணம்பட்டி காவல் நிலையம் சென்று பார்த்தேன். அப்போது தீபாவளி பண்டிகை என்பதால் நான் சென்னை போக வேண்டிய சூழ்நிலை இருந்தது, நான் உடனே அ.சா.1 புஷ்பராணிக்கு போன் செய்து கேட்டபோது தேவி எப்படி இறந்துட்டா என்று கேட்டதற்கு, யோகேஷ் வீட்டில் கொன்றுவிட்டார்கள் என்று சொன்னார், பாடி எங்கே இருக்கிறது, நாங்க வந்து பார்க்கலாமா என்று கேட்டதற்கு பாடியை கொண்டுபோய்விட்டார்கள் என்று சொன்னார், நான் சென்னை செல்ல வேண்டியிருந்ததால் சென்னை போய்விட்டேன்.

**குறுக்கு விசாரணை -**

தேவியை அவர் இறப்பதற்கு 5,6 வருடங்களாக முன்பாக எனக்கு பழக்கம். தேவி எனக்கு நெருங்கிய தோழியா என்றால் என் தங்கை போல் அவள், எல்லாவற்றையும் என்னோடு பகிர்ந்து கொள்வாள். தேவிக்கும், எதிரி 1 க்கும் பழக்கம் ஏற்பட்ட போது நானும், தேவியும் ஒரே இடத்தில் பணிபுரிந்தோமா என்றால் நான் ஐசிஐசிஐ ஏஜென்சியிலும், தேவி வேறொரு நிறுவனத்தில் Postpaid SIM ன் telemarketing ல் வேலை பார்த்தார். தேவி பொதுவாகவே அவருடைய வேலையில் கொடுக்கப்படும் target ஐ achieve செய்யும் நபரா என்றால் இல்லை. அந்த telemarket நிறுவனத்தில் சுமார் 40, 45 நாட்கள் தான் வேலை பார்த்தார். அந்த நிறுவனத்தில் காலை 9.45 க்கெல்லாம் வேலைக்கு சென்றிடுவார். மாலை 5.00 -6.00 வரைக்கும் வேலை பார்க்க வேண்டும். தேவி வேலை செய்த இடம் குறிச்சி எல்.ஐ.சி பஸ் நிறுத்தத்தில் அந்த நிறுவனம் இருந்தது. நானும், தேவியும் ஒன்றாக spanco என்ற நிறுவனத்தில் வேலை பார்த்தோம்,அதன்பின் தான் தேவி இந்த telemarket ல் வேலைக்கு வந்தார். 2012 ம் ஆண்டு நான், பரத், தேவி மூன்று பேரும், அதிகபட்சமாக 3 மாதங்கள் தான் வேலை பா ர்தோம், அங்கு சம்பள பிரச்சனை, target issue இருந்ததாலும், நாங்கள் எல்லோரும் வெளியில் வந்துவிட்டோம். spanco விலிருந்து வெளியில் வந்த பிறகு நானும், தேவியும் எவ்வளவு நாளுக்கு ஒரு முறை போனில் பேசிக்கொள்வோம் என்றால் அவள் அந்த telemarket ல் வேலைபார்க்கும்போது lunch time ல் lessure ஆக இருந்தால்

என்னிடம் பேசுவாள். தேவி எங்க வீட்டுக்கு வந்திருக்கிறாங்க, என் அப்பாவோடு பேசியிருக்கிறார், என் அம்மாவும் தேவிக்கு மீன் சமைத்து கொடுத்திருக்கிறார். யோகேஸ்வரனும், தேவியும் சுமார் 1 1/2 மாதங்கள் தான் லவ் செய்திருப்பார்கள். பொதுவாக இருவர் காதலிக்கும்போது பெண்ணுக்கும, ஆணுக்கும் அதிக வயசு வித்தியாசம் இருந்தாலும், வேறு வகுப்பை சேர்ந்தவராக இருந்தாலும், வீட்டில் பொதுவாக ஆதரிக்காமல் எதிர்ப்புதான் தெரிவிப்பார்கள் என்றால் சரிதான். தேவியின் வீட்டிலும் அந்த மாதிரியான காரணத்துக்காகத்தான் தேவியின் காதலுக்கு தொடக்கத்தில் எதிர்ப்பு இருந்தது என்றால் சரிதான். தேவி இறந்த அன்றே காலை 10.00 மணிக்கு யோகேஸ்வரன் எனக்கு காவல் நிலையத்திலிருந்தே போன் செய்தாரா என்றால் செய்தார். கால் வரும்போது நான் எந்த ஊரில் இருந்தேன் என்றால் கோவையில் இருந்தேன். மதியம் சுமார் 3.00 மணிக்கு நான் ஸ்டேசன் போய்விட்டேன். அங்கு போய் நான் எதிரி 1 யோகேஸ்வரனை பார்த்தேன். தேவி இறந்த மறுநாள் மாலை அ.சா.1 புஷ்பராணிக்கு போன் செய்து கேட்டுவிட்டு அதற்கு அடுத்த நாள் நான் சென்னை போய்விட்டேன். தேவி தாராபுரத்தில் அடைத்து வைக்கப்பட்டார் என்ற சங்கதியை யோகேஸ்வரன் எனக்கு சொல்லி தான் தெரியும், தேவி எனக்கு நேரடியாக போன் செய்தாரா என்றால் இல்லை. தேவி குடும்பத்தாரோடு நான் பேசுவேனா என்றால் தேவியுடன் தான் நான் பேசுவேன், அவங்க அம்மாவிடம் ஒரு முறை, 2 முறை தான் பேசியிருக்கிறேன். தேவிக்கு health issue என்பது அவள் spanco வில் வேலை பார்க்கும‌போது வயிறுவலி என்று சொல்வார்கள், நானும், பரத்தும் கொண்டு போய் சுந்தராபுரம் ஆர்.ஆர்.ஹாஸ்பிடலில் சேர்த்துவிட்டு தேவி குடும்பத்துக்கு தகவல் கொடுத்துவிடுவோம். இது போன்ற நிறுவனங்களில் பெண் ஊழியர்களுக்கு ஏதாவது ஆனால் கம்பெனியின் HR குடும்பத்தாருக்கு தகவல் கொடுத்துவிட்டு பெண் ஊழியர் என்பதால் lady attender ஐ அனுப்புவார்கள் என்றால் சரிதான். சாட்சி அவரே சொல்லிக்கொண்டார், நானும், தேவி, பரத்தும் ஒரு gang போல் இருந்ததால் எங்களிடமே தேவியை கூட்டிக்கொண்டு போகும்படி சொல்வார். குறிச்சியிலிருககும் தேவியின் வீட்டுக்கும், ஆர்.ஆர்.ஹாஸ்பிடலுக்கும் எவ்வளவு துாரம் என்றால் சுமார் 2-3 கி.மீ தொலைவு இருக்கும். தகவல் கொடுத்தால் ஒரு 10 நிமிடத்தில்

குறிச்சியிலிருந்து அந்த ஹாஸ்பிடலுக்கு வரமுடியும் என்றால் சரிதான். தேவி இறந்ததற்கு பின்பு சட்டரீதியான நடவடிக்கைகள் குறித்து யோகேஸ்வரனிடம் கேட்பேனா என்றால் நான் தீபாவளிக்கு சென்னை போய்விட்டு வந்து, 2-3 மாதங்கள் கழித்துதான் யோகேஸ்வரனை போனில் தொடர்பு கொண்டேன். யோகேஸ்வரன் என்னிடம் தான் ஜெயிலுக்கு போனதாகவும், பெயிலில் வந்ததாகவும் சொன்னார். இறப்பதற்கு 2,3 நாட்களுக்கு முன்பிருந்து நான் தேவியிடம் பேசவில்லை, அதற்கு முன்பாக நாங்கள் பேசும் போது யோகேஸ்வரன் என்னை நன்றாக பார்த்துகொள்கிறார், யோகேஸ் தான் என் வாழ்க்கை என்று கூறியிருக்கிறார். எதிரி 1, எனக்கு நெருங்கிய நண்பர் என்றும், அவரை இந்த குற்ற வழக்கிலிருந்து தப்பிக்க வைக்க வேண்டும் என்ற நோக்கில் உண்மைக்கு புறம்பாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.